செ.வெ.எண்:58/2019 நாள்:25.09.2019

**பத்திரிக்கைச் செய்தி**

**விவசாயிகளுக்கு மீன் தீவனம் கொள்முதல் செய்வது குறித்த விழிப்பணர்வு**

மீன் தீவனம் பொதுவாக மிதக்கும் மற்றும் மூழ்கும் தீவனம் எனும் தன்மையில் தயாரிக்கப்படுகின்றன. மீன்களின் வகைகளுக்கு ஏற்ப அதாவது கெண்டை மீன்களுக்கு மூழ்கும் தன்மையுள்ள குருணை தீவனமும் அல்லது கலவை தீவனமும் வழங்கலாம்.

நன்னீர் மீன் தீவனம், கெளுத்தி மீன் தீவனம் மற்றும் நன்னீர் இறால் மீன் தீவனம் ஆகிய மீன் தீவனங்கள் அனைத்து சத்துக்களையும் உள்ளடக்கிய ஒரு சரிவிகித கலவை தீவனமாக மீன்களுக்கு வழங்கப்படும் உணவாகும். இம்மீன் தீவனங்கள் செயற்கை முறையில் தயாரிக்கப்படுகிறது. இவற்றில் இந்திய தரக்கட்டுப்பாட்டிற்குள் BIS (Bureau of Indian Standards) தெரிவிக்கப்பட்டவாறு புரத சத்துக்கள் (16-20%), கொழுப்பு சத்துக்கள் (3-4%), மாவு சத்துக்கள் (10-12%), வைட்டமின் மற்றும் தாது உப்புகள் அனைத்தும் கொண்டு இருக்க வேண்டும். மீன் தீவனமானது நல்லமுறையில் மீன்கள் வளரவும், மீன்களின் உயிர் பிழைப்பு திறன் அதிக உள்ளதாக இருக்கவும் உதவுகின்றது. மேலும், மீன் உணவு குளத்தின் சுற்றுப்புற சூழல் மாசு ஏற்படாத வண்ணடம் எளிதில் நீரில் கரையாமல் இருக்க வேண்டும். இதுபோன்ற காரணிகள் விவசாயிகள் நன்கு ஆராய்ந்து மீன் உணவினை தேர்வு செய்து தங்களுடைய மீன் வளர்ப்புக்கு பயன்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்திய மீன் தீவன தர சான்று குறியீடு (Part I) நன்னீர் மீன் தீவனம்.

**::வெளியீடு::**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**